1975 அக்டோபர் 29]

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே ஒத்துக் கொள்வார்கள் என்று நம்புகிறேன், கவர்ச்சி நீண்ட நாளைக்கு நிலைக்காது. கவர்ச்சியை உண்டாக்கும் முயற்சியில் தமிழக அரசு இப்பொழுது ஈடுபடவில்லை. ஆனால் சித்த வைத்தியத்தின் தனிச் சிறப்புக்களைப் பற்றி, பிற மருத்துவங்களில் இல்லாத முறையில் எந்தெந்த வகைகளில் இதற்குத் தனிச் சிறப்பு உண்டு என்பதைப் பற்றிய ஆராய்ச்சிகள் தொடர்ந்து நடைபெறுவதன் மூலமாகவும், நீண்ட காலமாகப் பயன்படுத்தப்பட்டு வரும் சில மருந்துகளின் தரத்தை உறுதிப்படுத்துவதன் மூலமாகவும், அப்படிப்பட்ட ஆராய்ச்சிகளை அலோபதி மருத்துவர்களுக்கு அனுப்பி அவர்கள் அதைப் பரிசிலித்து ஏற்றுக்கொள்ளச் செய்வதன் மூலமாகவும் சில மருந்துகள், சில முறைகள் சிறப்படைய ஓரளவுக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. மேலும் சித்த மருத்துவத்தின் உண்மைகளை வெளிப்படுத்த அரசு மேலும் ஈடுபட்டு பல நூல்களை வெளிக் கொண்டு வர அச்சு ஏற்றும் பணி நடைபெறுகிறது. இதற்கான முயற்சியில் சென்னையில் இரண்டு மூன்று ஆராய்ச்சி நிலையங்கள் சித்த மருத்துவத் துறையில் ஈடுபட்டிருக்கின்றன. அந்த ஆராய்ச்சி வளர்ந்தால் அதற்கு மேலும் மதிப்பு வளரும். மக்களிடத்தில் சித்த மருத்துவத்தின் சிறப்பை எடுத்துச் சொல்லும் கடமை இருக்கிறது, அந்தக் கடமையை சட்டமன்ற உறுப்பினர்களும் மேற்கொண்டால் மக்கள் நல்ல பலன்களை அடைவார்கள்.

கைத்தறித் துணிகள் விலை

*115 வினா—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கூட்டுறவு கைத்தறி நிறுவனங்களில் விலை நிர்ணயம் எந்த அடிப்படையில் செய்யப்படுகின்றது?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: துணி நெய்வதற்கு உபயோகப்பட்டுள்ள நூலின் அடக்க விலை, சாயம் போடுவதற்கு ஏற்பட்ட செலவு, நெசவாளருக்குக் கொடுக்கப்பட்ட சம்பளம் இவற்றோடு இலாபத்தைச் சேர்த்து பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் துணியின் விலையை நிர்ணயிக்கின்றன.

பிரதம சங்கங்களிடமிருந்து வாங்கிய துணியின் கொள்முதல் விலையோடு இலாபத்தைச் சேர்த்து மாநில நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் துணியின் விற்பனை விலையை நிர்ணயிக்கிறது.

(முற்பகல் 9.30)

திரு. என். கிட்டப்பா: கூட்டுறவுக் கைத்தறி நிறுவனங்களில் உருவாக்கப்படுகிற துணிகளுக்கு கூறைநாடு கூட்டுறவுத் துறையிலே ஒரு விலையும், சேலம் கூட்டுறவுத் துறையிலே உருவாக்கப் படுகிற துணிகளுக்கு ஒரு விலையும் நிர்ணயிக்கப்படுகிறது. இப்படி ஒரே தரத்தில் இருக்கும் ரகத்தைச் சேர்ந்த துணிகளுக்கே விலை மாறுபடுகிற நிலை இருக்கிறது. இவற்றை மாற்றியமைத்து, விலைகள் ஒரே மாதிரி இருக்குமாறு நிர்ணயம் செய்ய நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இது அந்தந்தச் சங்கங் களுடைய உற்பத்திச் செலவைப் பொறுத்ததாகும். ஆகவே, நாம் அதை நிர்ணயிக்க முடியாது.

திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன்: கூட்டுறவுச் சங்கங்களில் இருந்து நான்கு மாதங்களுக்கு முன்பு கொள்முதல் செய்யும் போது அடக்க விலையில் இருந்து 10 சதவிகிதம் குறைவாகக் கொள்முதல் செய்யப்பட்டது. அண்மையில் 6 சதவிகித லாபம் கொடுத்து கொள்முதல் செய்கிறார்கள். அந்தச் சங்கங்களுக்கு செலவு நிரந்தரமாக இருக்கிறது. ஆகையால் குறைந்தபட்சம் 10 சதவிகித லாபம் கொடுத்து கொள்முதல் செய்ய அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இந்தப் பிரச்சினை இடைக் காலத்தில் ஏற்பட்ட ஒன்றாகும். துணிகள் ஏராளமாகத் தேங்கி விட்ட காரணத்தால் பிரதம சங்கங்களும், மாநிலச் சங்கமும் ஓரளவு தன்னுடைய லாபத்தைக் குறைத்து விற்க வேண்டு மென்ற முயற்சியில் ஏற்பட்ட நிலையாகும்.

திரு. சோ. அழகர்சாமி: உற்பத்திச் செலவு நூல் விலையையும், நெசவாளியின் கூலியையும் பொறுத்ததாக இருக்கும். கூலியைப் பொறுத்தமட்டில் இந்த மாநிலம் பூராவும் ஒரே

1975 அக்டோபர் 29]

மாதிரியாக இருக்க வேண்டுமென்று நிர்ணயித்துவிட்டால் உற்பத்திச் செலவில் மாற்றம் அதிகமிருக்க முடியாது. அந்த வகையில் அந்த நெசவாளத் தொழிலாளர்களுக்கு ஒரேவிதமான கூலியை நிர்ணயிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நாம் குறைந்த பட்சக் கூலியை நிர்ணயித்திருக்கிறோம்.

திரு. கே. எ. வகாப்: கைத்தறித் துணியை நேரடியாக உற்பத்திச் செய்கிறவர்களுக்குக் கிடைக்கிற லாபம் குறைவாகவும் அவற்றை வாங்கி விற்கக்கூடிய மாநிலச் சங்கங்களுக்கு லாபம் 25 சதவிகிதம் வரையிலும் இருக்கிறது. அந்த லாபம் பிரதம சங்கங்களுக்குப் போய்ச் சேருகிற அளவுக்கு வழிவகைகள் செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: மாநிலச் சங்கத்திற்கு லாபம் வந்தால் அது பிரதம சங்கத்திற்குத்தான் செல்லுகிறது.

திரு. கே. என். குமாரசாமி: உற்பத்திச் செலவுக்கேற்ப விலை நிர்ணயிக்கப்படுகிறது என்று சொன்னார்கள். கூலியைப் பொறுத்தவரை ஒரே மாதிரி நிர்ணயம் செய்து கொள்ள முடியும். அதே நேரத்தில் சாயம் மற்றப் பொருள்களின் விலை அதிகமாக இருப்பதால் அரசாங்கமே அவற்றைக் கொள்முதல் செய்து விநியோகிக்கவோ அல்லது மாநிலக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக விநியோகிக்கவோ ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: எந்தெந்தப் பொருள்களை மாநிலச் சங்கத்தின் மூலம் விநியோகம் செய்ய சட்டப்படி முடியுமோ அதைச் செய்கிறார்கள். எல்லாப் பொருள்களையும் நாமே வாங்கிக் கொடுக்கிற ஒரு நிலை இப்போது இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: கைத்தறித் துணிக்கு சில முக்கியமான விசேஷ காலங்களில் பொங்கல், தீபாவளி போன்ற நேரங்களில் 10 சதவிகிதம், 20 சதவிகிதம் ரிபேட் கொடுக்கப் படுகிறது. அதே போன்று ரிபேட் வருஷம் பூராவும் கொடுக்க

ஏற்பாடு செய்யப்படுமா? மத்திய சர்க்கார் வைத்திருக்கக்கூடிய ஹாண்ட்லூம் ஹவுசில் வருஷம் பூராவும் 5 சதவிகிதம் கொடுக்கிருர்கள். அதேபோல் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: மத்திய சர்க்கார் ரிபேட் கொடுப்பது பற்றிய செய்தி எனக்குத் தெரியவில்லை. மத்திய சர்க்கார் இதை எதிர்க்கிருர்கள். இந்த ரிபேட் சிஸ்டம் ரொம்ப மோசம், இந்த ரிபேட்டைக் கொடுக்காதீர்கள் என்று அவர்கள் போட்ட கமிட்டி சிபாரிசு செய்திருக்கிறது. மத்திய அரசும் தொடர்ந்து இந்த ரிபேட்டைக் கொடுக்கக் கூடாது என்று வலியுறுத்தி வருகிறது. நம்முடைய மாநில அரசு இதற்காக முன்பு 60 லட்ச ரூபாய் ஆண்டுக்கு ஒதுக்கிய நிலை மாறி இப்போது 1½ கோடி ரூபாய் அளவுக்கு ஒதுக்கியிருக்கிறது. மத்திய அரசு இதை ஆட்சேபிக்கிறது.

திரு. குப்பல் கே. எஸ். ராமகிருஷ்ணன்: கைத்தறித் துணி உற்பத்தியாளருக்கு 3 சதவிகிதம் லாபம், 6 சதவிகிதம் லாபம் என்று நிர்ணயித்து கொள்முதல் செய்யப்பட்டது. இனியாவது அதிகப்படியான லாபத்தை நிர்ணயித்து கொள்முதல் செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கொள்முதலில் ஏற்பட்டிருக்கும் சிரமம் இடைக்காலத்தில் ஏற்பட்ட சிரமம். துணிகள் ஏராளமாகத் தேங்கி இருந்த காரணத்தால் குறைத்து கொள்முதல் செய்யும் நிலை ஏற்பட்டது. விரைவில் இந்த நிலை மாறிவிடும்.

திரு. கே. டி. கே. தங்கமணி: சென்னையிலுள்ள மத்திய சர்க்கார் ஹாண்ட்லூம் ஹவுசில் வருஷம் பூராவும் 5 சதவிகிதம் ரிபேட் கொடுக்கிருர்கள். இதைப் பற்றி மற்ற வியாபாரிகளும் எங்கள் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிருர்கள். அந்த முறையில் ரிபேட் கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

1975 அக்டோபர் 29]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : எக்ஸ்போர்ட் கவுன்சில் என்று இருக்கிறது. அதைப் பற்றிச் சொல்லுகிறாரா என்று தெரியவில்லை. தனியாகக் கேட்டால் விவரம் அளிக்கலாம். ரிபேட்டைப் பொறுத்தவரை நம்முடைய மாநில அரசு மிக அதிகமாகக் கொடுத்து வருகிறது. மத்திய அரசு கொள்கை அளவில் இது கூடாது என்று சொல்லுகிறார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி : மத்திய கூட்டுறவுச் சங்கங்கள் 25 சதவிகிதம் லாபம் வைத்து விற்கின்றன என்று கனம் அங்கத்தினர் அவர்கள் சொன்னார்கள். அமைச்சர் அவர்கள் அந்த லாபம் பிரதம சங்கங்களுக்குப் போகிறது என்று தாராள மாகச் சொல்லுகிறார்கள். இடையில் கொஞ்சப் பேர் எங்களைப் போன்ற கொஞ்சம் பெண்கள் கைத்தறிச் சேலை அணிகிறோம். அந்தச் சேலைகளின் விலை 50 ரூ. 60 ரூ. என்று விற்கப்படுகிறது. ஆகவே, அந்த லாபம் 10 சதவிகிதத்திற்கு மேல் போகக்கூடாது என்று கண்டிப்பாக உத்தரவிட்டு, விலையைக் குறைக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மாண்புமிகு உறுப்பினர் கைத்தறிச் சேலை கட்டியிருக்கிறார்களா என்று தெரியவில்லை. (சிரிப்பு) ஆனால் பொதுவாகப் பார்க்கிறபோது, தனியாரோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது மாநிலச் சங்கங்கள் விற்பது குறைந்த விலையில்தான் விற்கப்படுகிறது.

விக்கிரமசிங்கபுரம் மலைப்பகுதி

116 வினா*—திரு. ச. சங்குமுத்து தேவர் :** மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் தாலுக்கா, விக்கிரமசிங்கபுரம் பேரூராட்சிப் பகுதி மலைப்பிரதேச பகுதியென அண்மையில் அறிவிக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.